1974 சனவரி 22]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, டயர் பற்றுக் குறையின் காரணமாக அரசாங்க பஸ்கள் ஏதாவது ஓடாமல் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நம்முடைய நாட்டிலே மட்டுமல்ல, நான் அண்மையிலே செய்திப் பத்திரிகையிலே பார்த்தேன். மகாராட்டிரத்திலே பஸ்கள் ஓடாமல் கணிசமாக இருக்கின்றன என்ற செய்தியைப் பார்த்தேன். இருந்தாலும் நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள டயர் கம்பெனிகளோடு நேரடிப் பேச்சு வார்த்தைகளின் மூலமாகக் கூடுமானவரையில் அந்தக் கஷ்டம் அதிகமில்லாத அளவில் பார்த்துக் கொள்கிறோம்.

Introduction of Mini-buses

* 89 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government have taken a decision on the question of introducing mini-buses: and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடம் இல்லை.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வாடகைக் கார்கள் ஒதுக்கீடு

* **90 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 சனவரி முதல் ஆகஸ்ட் வரை இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி வந்துள்ள அகதிகள் எத்தனை பேர் டூரிஸ்ட் டாக்சி தொழில் நடத்துவதற்காக அம்பாசிடர் கார் ஒதுக்கித்தர வேண்டும் என மனு போட்டுள்ளனர் ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்குக் கார் ஒதுக்கித் தரப் பட்டுள்ளது ?

திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மூன்று.

(இ) மூவருக்கும் அம்பாசிடர் கார் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.